பேரணாம்பட்டு நகரத்தில் இயங்கி வரும் அரசு மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும்.

பேரணாம்பட்டு ஒன்றியம், அரவட்லா மலையில் உள்ள வீரப்ப ஏரி, கடலப்ப ஏரி, தாம ஏரி ஆகிய ஏரிகளை ஆழப்படுத்தி அகலப்படுத்தி படகு குழாம் அமைத்து, அரவட்லாவை சுற்றுலா மையமாக மாற்ற வேண்டும்.

பேரணாம்பட்டு ஒன்றியத்தில் மாணவ/மாணவியர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்க தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக Mini Stadium அமைக்க வேண்டும்.

குடியாத்தம் தொகுதி மக்களின் நீண்ட கால மேற்படி கனவுகளை மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களில் சமர்ப்பித்து மேற்படி திட்டங்களை நிறைவேற்றித் தரும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28–7–2016) வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–55 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

20. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறையின் 16–2–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்கள் 20 மற்றும் 21 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

21. 2014–2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—